# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

## க.பொ.த உயர்தரம் (முதலாம் தவணைப் பரீட்சை) – 2024 (2025)

*நேரம் - 3 மணி* | தமிழ் | மேலதிக நேரம் - 10 நிமிடங்கள்

**அறிவுறுத்தல்கள்:**

❖ பகுதி I இல் உள்ள மூன்று வினாக்களுக்கும், பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கும், எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி 1

**01. மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

**அ. பூவொடு புரையுங் கண்ணும் வேயென**
**விறல்வனப் பெய்திய தோளும் பிறையென**
**மதிமயக் குறூஉ நுதலு நன்றும் நல்லமன்**
**வாழி தோழி அல்கலும் தயங்குதிரை பொருத**
**தாழை வெண்பூக் குருகென மலரும் பெருந்துறை**
**விரிநீர்ச் சேர்ப்பனொடு நகாஅ வூங்கே.**

அ. இச் செய்யுள் யாரால் யாருக்கு என்ன நோக்கத்திற்காக கூறப்பட்டது?

ஆ. தலைவியின் அழகு தொடர்பான உவமைகளை விளக்குக.

இ. வேய், மதி, குருகு, சேர்ப்பன் முதலான சொற்களின் கருத்தினைத் தருக.

**(15 புள்ளிகள்)**

**ஆ. பாலை ஏய் நிறத்தொடு பண்டு தான் படர்**
**ஓலை ஏய் நெடுங்கடல் ஓடிற்று இல்லையாம்**
**மாலை ஏய் நெடு முடி மன்னன் சேனை ஆம்**
**வேலையை மடுத்தது அக் கங்கை வெள்ளமே.**

அ. இச்செய்யுள் இடம்பெற்ற சந்தர்ப்பத்தினை விளக்குக.

ஆ. இச்செய்யுளில் யார்? எவ்வாறு சிறப்பிக்கப்படுகின்றார்?

இ. இச்செய்யுளில் கையாளப்பட்ட உவமை, உருவக அணிகளை விளக்குக.

**(15 புள்ளிகள்)**

kalvi.lk

**02. ஒவ்வொரு வினாவிற்கும் கீழே ஐந்து விடை தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. பின்வருவனவற்றுள் அண்ண வெடிப்பொலி

   1. ட்  2. ச்  3. ஞ்  4. ம்  5. க்

2. பின்வருவனவற்றுள் அரையுயிர்

   1. ஆ  2. ஊ  3. ங்  4. ய்  5. ர்

3. 'கரும்பு' என்ற சொல்லின் மொத்த மாத்திரை

   1. 4  2. 1  3. 3  4. 21/2  5. 5

4. இகரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்

   1. இனி  2. இனிப்பு  3. இதயம்  4. இடம்  5. இப்படி

5. பின்வருவனவற்றுள் இடைத்தொடர் குற்றியலுகரம்

   1. கொய்து  2. பயறு  3. கிணறு  4. மடு  5. எறும்பு

6. உடனிலை மெய்ம்மயக்கமும் வேற்றுநிலை மெய்ம்மயக்கமும் இடம்பெறும் சொல்

   1. பல்லவி  2. அண்ணா  3. கற்பு  4. கள்வன்
   5. வாய்க்கால்

7. ஒற்றளபெடையில் அளபெடுக்கும் எழுத்துக்களின் எண்ணிக்கை

   1. 10  2. 11  3. 6  4. 9  5. 8

8. பின்வருவனவற்றுள் இடையுயிர் எழுத்து

   1. ய்  2. ர்  3. ஆ  4. ஈ  5. உ

9. அண்மைச் சுட்டெழுத்து என அழைக்கப்படுவது.

   1. உ  2. அ  3. ஏ  4. இ  5. ஔ

10. தமிழில் உள்ள வல்லின உயிர்மெய் நெட்டெழுத்துக்களின் எண்ணிக்கை

   1. 42  2. 30  3. 9.  4. 126  5. 216

**(10 புள்ளிகள்)**

**03. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிவுசெய்து 300 – 350 சொற்களில் ஒரு கட்டுரை எழுதுக.**

அ. மாணவர் கல்வியில் நூலகப் பயன்பாடு

ஆ. அறிவியல்தமிழ்

இ. தமிழில் நாட்டார் பாடல்கள்

ஈ. மனித வாழ்வில் சமயம்

உ. 'மானிடம் போற்றி வாழ்'

**(20 புள்ளிகள்)**

Education கல்வி අධ්‍යාපන

## பகுதி II

**04. குற்றம்கடிதல் என்னும் அதிகாரத்தினைக் கொண்டு பின்வருவனவற்றினை விளக்குக.**

அ. குற்றங்களாகக் கருதப்படுபவை.

ஆ. பொதுவகையால் குற்றம் கடியும் வழிகள்.

இ. சிறப்பு வகையால் குற்றம் கடியும் வழிகள்.

ஈ. கையாளப்பட்டுள்ள உவமையின் சிறப்பு.

**(20 புள்ளிகள்)**

**05. சுவாமி விபுலானந்தரின் "தமிழ்த் தொண்டு" என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றினை விளக்குக.**

அ. தமிழ்மொழியின் சிறப்புக்கள்.

ஆ. சுப்பிரமணிய பாரதியாரை கட்டுரையாசிரியர் சிறப்பிக்கும் வகை.

இ. தமிழில் மொழிபெயர்க்கப்பட வேண்டிய வடமொழி நூல்கள்

**(20 புள்ளிகள்)**

**06. "கண்ணம்மா என் காதலி" என்ற கவிதையினூடாகப் பின்வருவனவற்றினை விளக்குக.**

அ. பாரதியார் இயற்கை மீது கொண்ட ஈடுபாடு.

ஆ. பாரதியார் கண்ணம்மாவை அடையாளம் கண்டுகொண்ட விதமும் மகிழ்ச்சியும்

இ. இக் கவிதையில் காணப்படும் சிறப்புக்கள்

**(20 புள்ளிகள்)**

**07.** அ. சங்ககால இலக்கியங்களை அகம், புறம் என்ற அடிப்படையில் வகைப்படுத்துக.

ஆ. அகத்திணைப் பாடலுக்குரிய பண்புகளை விளக்குக.

அ. கைக்கிளை, பெருந்திணை பற்றி விளக்குக.

**(20 புள்ளிகள்)**

**08. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.**

அ. 'தியாகம்' சிறுகதையில் கதிரேசன் செட்டியார் என்ற பாத்திரத்தின் தியாக உணர்வு

ஆ. குகப்படலத்தில் பரதனின் சேனையின் பெருக்கம் சித்திரிக்கப்படும் விதம்.

இ. திருமுருகாற்றுப்படை ஏனைய ஆற்றுப்படை இலக்கியங்களிலிருந்து வேறுபடும் விதம்.

ஈ. குயிற்பாட்டு என்ற கவிதையில் பாரதியாரைக் கொள்ளை கொண்ட ஓசைகள்.

**(20 புள்ளிகள்)**

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page